**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 156/2024**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. வேலுமணி** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. சண்முகம்** | **Calling** | : | **கவுன்சிலர், பொன்னம்பட்டி** |
| **Village** | : | **துவரங்குறிச்சி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **36** |
| | | | **Dated** | : | **03.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**1, 2, 4, 6, 7, 8 வரையிலான எதிரிகள் ஆஜர். 3-ம் எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 5-ம் எதிரி ஆஜரில்லை, அவருக்காக அவருடைய வழக்கறிஞர் ஆஜர்.**

அ.சா. 1 (பட்டியல் சாட்சி 1), **திரு. வேலுமணி** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து பொன்னம்பட்டி கவுன்சிலராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் மற்றும் கைரேகை என்னுடையது தான். அதை சாணார்பட்டி காவல் நிலையத்தில் வைத்து செய்தேன். 17.08.2023 ம் தேதி இரவு சுமார் 10.00 மணிக்கு மேல் எனக்கு ஒரு அழைப்பு அலைபேசி மூலமாக வந்தது. ஒரு பெண்மணி எங்களை விருந்திற்கு அழைத்தார். அதிகாரிப்பட்டிக்கு

வரச்சொல்லி அழைப்பு வந்தது. அன்று சேர்மேனுக்கு பிறந்தநாள் என்பதால், தெரிந்தவர்கள்தான் விருந்திற்கு அழைக்கிறார்கள் என்று நானும், எனது உறவினர் செல்லப்பாண்டியும் போனோம். இயற்கை உபாதைக்காக சிலுவத்தூருக்கு முன்பாக ஒரு வீட்டின் அருகே காரை நிறுத்திவிட்டு இறங்கினோம். அங்கு சுமார் 7, 8 பேர் பைக்கில் திடுதிடுவென்று வந்தார்கள். கத்தியைக்காட்டி மிரட்டி பக்கத்தில் இருந்த மாந்தொப்பிற்கு அழைத்துச் சென்றார்கள். எங்களிடம் இருந்த பணம், செல்போன் ஆகியவற்றை எடுத்துவிட்டார்கள். எங்கள் இருவரையும் பிரிந்து வெவ்வேறு இடங்களுக்கு கொண்டு சென்றார்கள். அதில் நான் மட்டும் என்னை மிரட்டிக் கொண்டு இருந்த நபரிடம் இருந்த கத்தியை பிடுங்கி அருகில் இருந்த ஊருக்குள் ஓடிவிட்டேன். அங்கிருந்தவர்களை அழைத்துக் கொண்டு எங்களை மிரட்டிய நபர்களைத் தேடினோம். தேடிப்பார்த்தும் கிடைக்காததால் 100–க்கு போன் செய்து, போலீஸை வரச்சொல்லி, நடந்த சம்பவத்தைச் சொன்னேன். என் உறவினர் செல்லப்பாண்டியை பணம் வாங்கி வரச்சொல்லி அனுப்பி வைத்துள்ளனர். என் கையில் அடிபட்டு இருந்ததால் நான் மருத்துவமனைக்கு போனேன். எங்களை கடத்திய நபர்களை எங்களுக்கு அடையாளம் தெரியாததால் புகார் கொடுக்கலாமா வேண்டாமா என்று குழப்பத்தில் இருந்துவிட்டு, ஒரு வாரம் கழித்து காவல்நிலைத்தில் புகார் கொடுத்தோம். புகார் மனுவில் போலீசார் எழுதிக் கொண்டனர். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. **மேற்படி புகார் மனுவில் உள்ள கைரேகை மற்றும் வேல்மணி என்ற கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நீலநிற செல்போன் என்னுடையதுதான். **அது சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மற்றொரு செல்போன் எனது உறவினர் செல்லப்பாண்டி

என்பவருடையது. **அது சா.பொ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எங்களை பணம் கேட்டு மிரட்டிய நபர்கள் முகமூடி எதுவும் அணியவில்லை. இருட்டாக இருந்ததால் அவர்களை சரியாக அடையாளம் தெரியவில்லை. போலீசார் எங்களை மிரட்டிய நபர்கள் பற்றிய தகவல் எதுவும் சொல்லவில்லை. நான் 10–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுதப் படிக்கத் தெரியும். எனக்கு வலது உள்ளங்கையில் இரத்தக் காயம் ஏற்பட்டு இருந்ததால் என்னால் புகார் எழுத முடியவில்லை. மற்ற விபரங்களை நான் போலீசாரிடம் சொன்னேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை (அனைத்து எதிரிகளுக்கும் பொதுவான குறுக்கு விசாரணை):–**

சம்பவத்தன்று நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 24.08.2023 ம்தேதி போலீசார் என்னை காவல் நிலையத்திற்கு வரச்சொன்னார்களா என்றால் சரிதான். அங்கு போலீசார் எழுதிக் கொண்டு என்னிடம் கையொப்பம் மட்டும் வாங்கினார்கள் என்றால் சரிதான். அதில் என்ன எழுதி இருந்தது என்பதை நான் படித்துப் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

Taken down by me/before me in open court on03.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.03.03 17:27:38 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 156/2024**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. செல்லப்பாண்டி** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. குமார்** | **Calling** | : | **கேசியர், பேன்சி ஸ்டோர்.** |
| **Village** | : | **துவரங்குறிச்சி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **27** |
| | | | **Dated** | : | **03.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**1, 2, 4, 6, 7, 8 வரையிலான எதிரிகள் ஆஜர். 3-ம் எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 5-ம் எதிரி ஆஜரில்லை, அவருக்காக அவருடைய வழக்கறிஞர் ஆஜர்.**

அ.சா. 2 (பட்டியல் சாட்சி 2), **திரு. செல்லப்பாண்டி** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :-**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து பேன்ஸி ஸ்டோர் கேசியராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. அசா. 1 என்னுடைய மாமா. 17.08.2023 ம் தேதி இரவு சுமார் 11.00 – 12.00 மணி இருக்கும், அப்போது என் மாமா அசா. 1 என்னை வாடா ஒரு இடத்திற்கு போவோம் என்று அவருடைய காரில் சென்றோம். மணக்காட்டு ரோடு – திண்டுக்கல் ரோட்டில் உள்ள அதிகாரிபட்டி அருகே சென்றோம். அப்போது எனது மாமா அசா. 1 இயற்கை உபாதைக்காக

காரை நிறுத்திவிட்டு இறங்கி ரோட்டில் நின்று கொண்டு இருந்தார். அப்பொழுது நாங்கள் வந்த காரை வளைத்து நிறுத்துவதற்காக இயக்கி கொண்டு இருந்தேன். சுமார் 3 – 4 நபர்கள் எனது மாமா அசா. 1 ஐ வழிப்பறி செய்வதற்காக கையில் கத்தியை வைத்துக் கொண்டு, எனது மாமா அசா. 1 னிடம் இருந்து ரூ. 15,000/– மற்றும் செல்போன் ஆகியவற்றையும், என்னிடம் இருந்து பணம் ரூ. 500/– மற்றும் செல்போனையும் மிரட்டி பிடுங்கிக் கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள மஞ்சள் கலர் செல்போன் அது தான். அது ஏற்கனவே சா.பொ. 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகு நாங்கள் வந்த காரையும் எடுத்துச் சென்றுவிட்டார்கள். எங்களை அவர்கள் வந்த இரண்டு சக்கர வாகனத்தில் பின்னால் ஏற்றிக் கொண்டு, ஒரு மாந்தோப்பிற்கு கூட்டிச் சென்றார்கள். அங்கு வைத்து எங்கள் இருவரையும் அடித்தார்கள். அதன்பிறகு என்னை தனியாக காரிலும், எனது மாமா அ.சா. 1 ஐ இரண்டு சக்கர வாகனத்தில் கூட்டிச் சென்றுவிட்டார்கள். இரவு சுமார் 12.00 மணியளவில், அதிகாரிபட்டியில் இருந்து சுமார் 6 கி.மீ. தொலைவில் என்னை இறக்கிவிட்டார்கள். என்னை கடத்திச் சென்றவர்கள் அ.சா. 1 ஐ விட்டுவிடுவதற்கு ரூ. 10 லட்சம் வாங்கி வரச்சொன்னார்கள். அப்பொழுது என்னுடைய அலைபேசியை கொடுத்தால்தான், நான் மற்றவர்களை தொடர்பு கொண்டு பணம் புறட்ட முடியும் என்று சொன்னேன். அதற்கு அவர்கள் என்னை தகாத வார்த்தைகளால் திட்டி, நாங்கள் வந்த காரை மட்டும் என்னிடம் கொடுத்துவிட்டு சென்றுவிட்டார்கள். அதன்பிறகு எனது வீடு உள்ள துவரங்குறிச்சிக்கு வந்துவிட்டேன். அதன்பிறகு இரவு சுமார் 01.00 – 02.00 மணியிருக்கும், சாணார்பட்டி காவல்நிலையத்தில் இருந்து போலீசார் எங்கள் வீட்டு அலைபேசிக்கு போன் செய்தார்கள். அசா. 1 சாணார்பட்டி

காவல்நிலையத்தில் இருப்பதாகவும் சொன்னதன்பேரில், அவரை பார்ப்பதற்காக சென்றபோது, மணக்காட்டுர் அருகே அசா. 1 எதிரே வந்ததால், அவரைப் பார்த்து விசாரித்தேன். அசா. 1க்கு வலது கையில் இரத்தக்காயம் ஏற்பட்டு, இரத்தம் வந்து கொண்டு இருந்ததால், முதலுதவி செய்வதற்காக துவரங்குறிச்சியில் உள்ள நலிம் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். இது சம்மந்தமாக எனது மாமா அசா. 1 புகார் கொடுத்தார். அந்த புகாரை அசா. 1 எழுதினார். மேற்படி புகாரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். **அது அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எங்களை மிரட்டியவர்களையும், அடித்து பணம் பறித்தவர்களையும் பற்றியும், இருட்டாக இருந்ததால் அடையாம் தெரியவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை (அனைத்து எதிரிகளுக்கும் பொதுவான குறுக்கு விசாரணை):–</u>**

புகார் மனுவை போலீசார் எழுதிக் கொண்டு என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். என் மாமா சொல்ல சொல்ல எழுதிவிட்டு என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். அதை நான் படித்துப் பார்க்காமல் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

**Taken down by me/before me in open court on03.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.03.03 17:27:48 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**